# 'அறிவே சிறந்தது'

-சத்குரு ஜக்கி வாசுதேவ்



பாவம் என்று நீங்கள் கருதுபவை அனைத்தையும் ஒரு பட்டியலிடுங்கள். உலகின் மிக முக்கியமான ஐந்து மதங்கள் எவற்றை யெல்லாம் பாவம் என்று சொல்கிறதோ, அவற்றையெல்லாம் பட்டிய லிட்டால் உயிரோடு இருப்பதே பாவம் என்ற முடிவிற்கு வந்து விடுவீர் கள்.

நீங்கள் ஏன் கோவி லுக்குச் செல்கிறீர்கள்? ஏதோ ஒன்றைக் குறித்து குற்ற உணர்ச்சி ஏற்பட்டால் ஒழிய, நீங்கள் கோவிலுக்கோ தேவாலயத்திற்கோ, மசூதிக்கோ செல்ல மாட்டீர் கள். பயம் மற்றும் குற்ற உணர்ச்சியைக் கருவி களாகக் கொண்டு தான் மதங்கள் நடத்தப் படுகின்றன. பயமும் குற்ற உணர்ச்சியும் இல்லாத போது, கோவிலுக்குச் செல்பவர் எண்ணிக்கை வெகுவாக குறைந்துவிடும். பேராசை, பயம், குற்ற உணர்ச்சி இவை மூன்றும் தான் உங்கள் பிரார்த் தனைகளுக்கு அடித்தள மாக உள்ளன. உங்கள் வாழ்வின் அடிப்படைச் செயல்முறைககளையே 'பாவம்' என்று முத்திரை குத்தி விட்டதால் இப்போது நீங்கள் குற்ற உணர்விலிருந்து தப்பிக்க இயலாது. எனவே கோயிலுக்குச் சென்று பணத்தைச் செலுத்தி பூஜை செய்கிறீர்கள்,

ஆனால் நான் சொல் கிறேன். உங்களுக்கு எது விருப்பமோ அதைச் செய் யுங்கள். உங்களுடைய ஒவ்வொரு செயலுக்கும் பின்வளைவு நிச்சயம் உண்டு என்பதை மட்டும் நினைவில் கொண்டு எதை வேண்டுமானாலும் செய்யுங்கள். எந்த பின்விளைவையும் மகிழ்ச்சியோடு ஏற்கும் மனப்பக்குவம் இருந்தால் நீங்கள் விரும்பியதைச் செய்யலாம். நீங்கள் ஏற்க விரும்பாத விளைவுகள் வரும்போது புலம்பி அழும் குணம் உடையவர் என்றால் ஒவ்வொரு செயலையும் துல்லியமாக ஆராய்ந்து தான் செய்ய வேண்டும். எது நடந்தாலும் பரவாயில்லை. நாளை நான் தூக்கு மேடைக்குச் செல்லவும் தயார், எதுவும் எனக்கு ஆனந்தமே என்ற நிலையில் இருந்தால் நீங்கள் எதை வேண்டுமானாலும் செய்யலாம்.

செயல் என்பது உடல், மனம், உணர்வு, சக்திநிலை போன்ற எந்த நிலையில் செய்யப்பட்டிருந்தாலும் நிச்சயம் அதற்குப்பின் விளைவு உண்டு. விளைவு களுக்கு நீங்கள் தயாராக இருக்கிறீர்களா? மனிதர்களாக பிறந்துள்ள நாம், குறைந்தபட்சம் இந்த அளவிற்காவது முன்னெச்சரிக்கையுடன் சிந்தித்துச் செயல்பட வேண்டுமல்லவா?

எந்த செயலும் பாவம் இல்லை. அப்படி யானால் எதுவுமே புண்ணியம் தானா? அப்படியும் இல்லை. பாவம் என்றும் புண்ணியம் என்றும் எதுவுமே இல்லை. பாவம் புண்ணியம் என்பதெல்லாம் உங்களை கட்டுப்பாட்டில் வைத்துக்கொள்ள மனிதர்கள் ஏற்படுத்தியவை. உங்களை கட்டுக்குள் வைத்துக் கொள்ள அறிவுதான் சிறந்தது. குற்ற உணர்ச்சி இல்லை. தன்னைத்தானே கட்டுக் குள் வைத்திருக்க மனித அறிவால் முடியும் என்றே நம்புகிறேன்.

உங்களைக் கட்டுக்குள் வைத் திருக்க கடவுள் தேவை யில்லை.

எனவே உங்கள் அறிவு இயங்க நீங்கள் அனுமதித்தால், அது உங்களைக் கட்டுக்குள் வைத்துக்கொள்ளும், இல்லையா? அப்படிச் செய்வதுதான் அறிவான செயல்.